ஈவ்லின் இரத்தினம் நூலக ஆவணங்களை ஆவணப்படுத்தல்
ஆண்டறிக்கை **2021/2022**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | ஈவ்லின் இரத்தினம் நூலக ஆவணங்களை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | 78 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2020-2022 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலகம் நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | Little Aid, நூலகர் ந. செல்வராஜா, தேசம் த. ஜெயபாலன் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | |
| செயற்றிட்டச் செலவுகள் | 2022-LKR 271,547.00 |

அறிமுகம்

ஈவ்லின் இரத்தினம் பல்லின பண்பாட்டு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. இது மறைந்த டாக்டர் ஜேம்ஸ் டி. இரத்தினத்தின் மறைந்த மனைவி ஈவ்லின் விஜயரட்ண இரத்தினம் நினைவாக நிறுவப்பட்டது. டாக்டர் இரத்தினம் அவர்கள் தனது தொடர்புகளினூடாக பல்கலைகழகங்களில் இருந்து சேகரித்த புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகளின் தொகுப்பை கொண்டு இந்த ஆராய்ச்சி நூலகத்தை உருவாக்கினார்.
ஆராய்ச்சியாளர்கள், முன்னணி சட்ட பிரமுகர்கள் மற்றும் வணிகர்கள் கற்றறிந்த பணியாளர்கள் எப்போதும் அவரது ஆலோசனைக்காக அங்கு சென்று அவரது நூலகத்தை பயன்படுத்தினர். பின்னர் டாக்டர் இரத்தினம் தனது புத்தகங்களின் தொகுப்பை வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாண கல்லூரிக்கு வழங்கியுள்ளார். அத்துடன் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக புத்தகங்களை சேமிக்க யாழ்ப்பாணத்தில் ஒரு கட்டிடத்தை நிறுவினார். இது ஈவ்லின் இரத்தினம் நிறுவனம் என்று பெயரிடப்பட்டது. இது தற்போது யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையின் ஆளுகைக்கு உட்பட்ட நிலையமாக இருக்கிறது.

செயற்றிட்ட நோக்கம்

தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான தொகுப்புகளை எண்ணிமப்படுத்தி பாதுகாக்கும் பணியிலே, நூலக நிறுவனம் தனது செயற்பாட்டை மேற்கொண்டு வருகிறது. இந்த செயற்றிட்டம் இலங்கையிலே தமிழ் பேசும் சமூகங்களின் மத்தியிலே இயங்கும் நூலகங்களில் காணப்படுகின்ற ஆவணங்களையும், இந்தச் சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களையும் எண்ணிமப்படுத்தி அவற்றைப் பாதுகாத்து ஆவணப்படுத்துவதுடன் தொடர்பானது. இந்தத் தொடர் செயற்பாட்டின் ஒரு பகுதியாக ஈவ்லின் இரத்தினம் நூலகத்தில் காணப்படுகின்ற, இலங்கையினைச் சேர்ந்த தமிழ் பேசும் சமூகங்களின் வரலாறு, அரசியல், பொருளாதாரம், கலாசாரம், கல்வி, இலக்கியம், கலை போன்ற விடயங்களுடன் தொடர்பான ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

பின்னணி

நூலகம் என்பது, பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் அல்லது தனி நபர்களால் உருவாக்கப்பட்டுப் பேணப்படுகின்ற தகவல் மூலங்களின் அல்லது சேவைகளின் ஒரு சேமிப்பு ஆகும். மரபு வழியான நோக்கில் இது நூல்களின் சேமிப்பு எனலாம். இந்தச் சேமிப்புக்களில் இடம்பெறும் நூல்களும், பிரசுரங்களும் அனைவராலும் பயன்படுத்தக்கூடிய வகையில் காணப்படுகிறன.

இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகள், சொத்துக்கள் மற்றும் சிறப்புக்கள், விழுமியங்களை ஆவணப்படுத்திப் பாதுகாத்து அனைவருக்கும் கிடைக்கச்செய்தல் மற்றும் அறிவுருவாக்கத்திலும் கற்றலிலும் ஈடுபடும் வகையிலே திறமைமிக்க சமுதாயங்களை உருவாக்கல் போன்ற நூலக நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு அமைவாக, நிறுவனங்கள் சார்ந்த ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் நூலகங்கள் முதன்மை பெற்றன. இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தில் ஈவ்லின் இரத்தினம் நூலகத்தில் காணப்படுகின்ற இலங்கையினைச் சேர்ந்த தமிழ் பேசும் சமூகங்களின் வரலாறு, அரசியல், பொருளாதாரம், கலாசாரம், கல்வி, இலக்கியம், கலை போன்ற விடயங்களுடன் தொடர்பான ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஆவணங்களை அனுமதி பெற்று எண்ணிமப்படுத்தும் செயற்றிட்டத்தை நூலக நிறுவனம் மேற்கொள்கின்றது. நூலக நிறுவனமானது தனது நோக்கத்தினை அடைவதற்காக பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. பல்வேறு கல்வி, பண்பாட்டு நிறுவனங்களுடனான கூட்டுச் செயற்பாடுகள் ஊடாக ஆவணப்படுத்தல் சார்ந்தும் செயலாற்றியுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாணம் பொது நூலகம், யாழ்ப் பல்கலைக்கழக நூலகம், கிழக்கு பல்கலைக்கழக நூலகம் மற்றும் பாடசாலையிலுள்ள நூலகங்கள் சார்ந்து முன்னைய செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளது.

செயற்பாடுகள் / திட்டமிடல்

- ஈவ்லின் இரத்தினம் நூலக பொறுப்பாளருடன் கலந்துரையாடி நூலகத்தில் காணப்படுகின்ற ஆவணங்களை எண்ணிமப்படுத்துவதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

- இந்த நூலகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களுடன் தொடர்புடைய ஆவணங்கள் அடையாளம் காணப்பட்டு அவை பிரித்து வைக்கப்பட்டுள்ளன.

- ஈவ்லின் இரத்தினம் நூலக ஆவணங்கள் நூலக நிறுவனத்திற்கு கொண்டு சென்று எண்ணிமப்படுத்துவதற்கான அனுமதி பெறப்பட்டு எண்ணிமப்படுத்தல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

- நூலகத்தில் வலைவாசல் உருவாக்கப்பட்டு ஆவணங்கள் பதிவேற்றப்பட்டன.

அடைவுகள்
2020 ஆண்டு யூலை முதல் டிசம்பர் வரை மின்வருடப்பட்டு வலைத்தளத்தில் இணைக்கப்பட்ட ஆவணங்களும் பக்கங்களும்

| இல | வருடம் | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | 2020 | 746 | 61,711 |
| 2 | 2021 | 1114 | 60,431 |
| 3 | 2022 | 712 | 101,973 |
| **4** | மொத்தம் | **2,572** | **224,115** |

எதிர்கொண்ட சவால்கள்

- ஈவ்லின் இரத்தினம் நூல்களும் ஆவணங்களும் மிகவும் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. அத்துடன் பெரும்பாலன புத்தகங்கள் தூசு படிந்தும் காணப்படுகிறது. இதனால் இவற்றை துப்பரவு செய்து எண்ணிமப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

அடையாளம் காணப்பட்டவை

- ஈவ்லின் இரத்தினம் நூலகமானது ஆவணகப்படுத்தலுடன் தொடர்புடைய பல ஆவணங்கள் மற்றும் கையெழுத்து பிரதிகளை கொண்டுள்ளது. அவற்றை எண்ணிமப்படுத்தி பாதுகாப்பதன் மூலம் அவை பல்வேறுபட்ட ஆய்வுகள் மற்றும் கல்விசார் செயற்பாடுகளுக்கும் உதவியாக இருக்கும் .
- இந்த நூலகத்தில் இலங்கை தவிர வேறு நாடுகள் தொடர்பான ஆவணங்கள் உள்ளன. இவற்றையும் உரிய முறையில் பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இத்திட்டத்திற்கான எண்ணிமப்படுத்துவதற்கான ஆவணங்களை முழுமையாக பட்டியலிட்டு வகைப்படுத்தல் அவசியம் .
- தன்னார்வலர்களை இணைத்து திட்டமிட்டு செயற்பாடுகளை முன்னகர்த்துவதற்கான திட்டமிடலை மேற்கொள்ளல். (நூலகத்தின் நூல்களை வகை பிரித்தல் மற்றும் எண்ணிமப்படுத்தலுக்கு இலகுவாக ஒழுங்கமைத்தல் போன்றவற்றை தன்னார்வலர்களின் உதவியுடன் செய்தல்).

முடிவுரை

இதுவரை நூலகத்தின் ஊடாக 2,572 நூல்கள் மற்றும் ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன. ஈவ்லின் இரத்தினம் நூலகமானது அரிய பல ஆவணங்களை கொண்ட ஒரு ஆய்வு நூலகமாகும். இதனை அவ் ஆவணங்கள் மேலும் சிதைவடைவதற்கு முன்பு எண்ணிமப்படுத்த வேண்டியதன் அவசியம் உள்ளது. இச் செயற்றிட்டத்தை நேர்த்தியாக கொண்டு செல்வதற்கான நிதி உதவி தேவைப்படுகிறது. அத்துடன் இச் செயற்றிட்டத்திற்கு என ஊழியர் எடுக்கும் பட்சத்தில் மிக வேகமாக மீதமுள்ள நூல்கள் மற்றும் ஆவணங்களை எண்ணிமப்படுத்த முடியும்.

பின்னிணைப்பு

வலைவாசல்:ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாடு ...